ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஆளும் பணியும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆளும் பணியும் ॥

திருநறையூர் - 4

‡ஆளும் பணியும் அடியேனைக்
கொண்டான்⋆ விண்ட நிசாசரரை⋆
தோளும் தலையும் துணிவெய்தச்⋆
சுடு வெஞ்சிலைவாய்ச் சரம் துரந்தான்⋆
வேளும் சேயும் அனையாரும்⋆
வேற்கணாரும் பயில் வீதி⋆
நாளும் விழவின் ஒலியோவா⋆
நறையூர் நின்ற நம்பியே (1)

முனியாய் வந்து மூவெழுகால்⋆
முடி சேர் மன்னர் உடல் துணிய⋆
தனி வாய் மழுவின் படையாண்ட⋆
தாரார் தோளான் வார் புறவில்⋆
பனி சேர் முல்லை பல்லரும்ப⋆
பானல் ஒருபால் கண் காட்ட⋆
நனி சேர் கமலம் முகம் காட்டும்⋆
நறையூர் நின்ற நம்பியே (2)

தெள்ளார் கடல்வாய் விட வாயச்⋆
சின வாள் அரவில் துயில் அமர்ந்து⋆
துள்ளா வரு மான் வீழ⋆ வாளி
துரந்தான் இரந்தான் மாவலி மண்⋆
புள்ளார் புறவில் பூங்காவி⋆
புலன்கொள் மாதர் கண் காட்ட⋆
நள்ளார் கமலம் முகம் காட்டும்⋆
நறையூர் நின்ற நம்பியே (3)

www.prapatti.com

ஒளியா வெண்ணெய் உண்டான் என்று⋆
    உரலோடாய்ச்சி ஒண் கயிற்றால்⋆
விளியா ஆர்க்க ஆப்புண்டு⋆
    விம்மியழுதான் மென் மலர்மேல்⋆
களியா வண்டு கள்ளுண்ணக்⋆
    காமர் தென்றல் அலர் தூற்ற⋆
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும்⋆
    நறையூர் நின்ற நம்பியே (4)

வில்லார் விழவில் வட மதுரை⋆
    விரும்பி விரும்பா மல்லடர்த்து⋆
கல்லார் திரள் தோள் கஞ்சனைக்
    காய்ந்தான்⋆ பாய்ந்தான் காளியன்மேல்⋆
சொல்லார் சுருதி முறையோதிச்⋆
    சோமுச் செய்யும் தொழிலினோர்⋆
நல்லார் மறையோர் பலர் வாழும்⋆
    நறையூர் நின்ற நம்பியே (5)

வள்ளி கொழுநன் முதலாய⋆
    மக்களோடு முக்கண்ணான்
வெள்கியோட⋆ விறல் வாணன்⋆
    வியந் தோள் வனத்தைத் துணித்துகந்தான்⋆
பள்ளி கமலத்திடைப் பட்ட⋆
    பகு வாய் அலவன் முகம் நோக்கி⋆
நள்ளியூடும் வயல் சூழ்ந்த⋆
    நறையூர் நின்ற நம்பியே (6)

மிடையா வந்தவேல் மன்னர்
    வீய⋆ விசயன் தேர் கடவி⋆
குடையா வரை ஒன்றெடுத்து⋆ ஆயர்
    கோவாய் நின்றான் கூராழிப்
படையான்⋆ வேதம் நான்கைந்து
    வேள்வி⋆ அங்கம் ஆறிசையேழ்⋆

www.prapatti.com

நடையா வல்ல அந்தணர் வாழ்⋆
நறையூர் நின்ற நம்பியே (7)

பந்தார் விரலாள் பாஞ்சாலி⋆
கூந்தல் முடிக்கப் பாரதத்து⋆
கந்தார் களிற்றுக் கழல் மன்னர்
கலங்கச்⋆ சங்கம் வாய் வைத்தான்⋆
செந்தாமரைமேல் அயனோடு⋆
சிவனும் அனைய பெருமையோர்⋆
நந்தா வண் கை மறையோர் வாழ்⋆
நறையூர் நின்ற நம்பியே (8)

ஆறும் பிறையும் அரவமும்⋆
அடம்பும் சடைமேல் அணிந்து⋆ உடலம்
நீறும் பூசி ஏறூரும்⋆
இறையோன் சென்று குறையிரப்ப⋆
மாறொன்றில்லா வாச நீர்⋆
வரை மார்பகலத்தளித்துகந்தான்⋆
நாறும் பொழில் சூழ்ந்தழகாய⋆
நறையூர் நின்ற நம்பியே (9)

‡நன்மையுடைய மறையோர் வாழ்⋆
நறையூர் நின்ற நம்பியை⋆
கன்னி மதில் சூழ் வயல் மங்கைக்⋆
கலியன் ஒலிசெய் தமிழ்மாலை⋆
பன்னியுலகில் பாடுவார்⋆
பாடு சாரா பழ வினைகள்⋆
மன்னி உலகம் ஆண்டு போய்⋆
வானோர் வணங்க வாழ்வாரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com